பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 71

28.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் கண்காணிப்பாளர், மற்றும் ஆதி திராவிட நல அலுவலருக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.கண்ணன், ஆதிதிராவிட நலபள்ளி, பாலகிருஷ்ணன்பட்டி, துறையூர் தாலுகா, திருச்சி மாவட்டத்தில் ஆசிரியராக வேலை செய்து கொண்டிருந்தார். புகார்தாரர் மீது குற்றவழக்கு ஒன்று நிலுவையில் இருந்தது, இந்நிலையில் புகார்தாரர் மருத்துவவிடுப்பில் இருந்துள்ளார். மருத்துவவிடுப்பு முடித்து பள்ளியில் திரும்பவும் வேலைக்கு சேர சென்றபோது பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு.தேவதாஸ், ஆதிதிராவிட நல அலுவலர், திருச்சி அவர்களை சந்தித்து அவரிடமிருந்து ஆணை பெற்றுவருமாறு கூறியுள்ளார். திரு.தேவதாஸ், ஆதிதிரரிவட நல அலுவலர், திருச்சி அவர்கள் குற்றவழக்கு காரணமாக பணிநீக்கம் செய்யாமல் பணி ஆணை வழங்க தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். மேலும் திரு.சந்திரசேகரன், கண்காணிப்பாளர் அவர்களை சந்திக்குமாறு கூறியுள்ளார். திரு.சந்திரசேகரன், கண்காணிப்பாளர், ஆதிதிராவிட நல அலுவலகம், திருச்சி அவர்கள் ஆணையை தயார் செய்வதற்கு தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 10.08.2009 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.தேவதாஸ் அவர்களின் உத்தரவுப்படி திரு.சந்திரசேகரன், கண்காணிப்பாளர் அவர்கள் லஞ்சபணம் ரூ.10,,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது ஊழல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு இன்று 28.08.2026ந் - தேதி திரு.தேவதாஸ், ஆதிதிரரிவட நல அலுவலர், மற்றும் திரு.சந்திரசேகரன், கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 71
28.08.2026

SUPERINTENDENT, AND ADI DRAVIDAR WELFARE OFFICER CONVICTED IN BRIBE CASE

The complainant Tr. Kannan, has working as Teacher at Adi Dravida Welfare School, Balakrishnanpatti, Thuraiyur Taluk, Trichy District. A criminal case was pending against the complainant. During this period the complainant availed medical leave. After completion of medical leave he went to the school, for joining duty. The head master of the school asked the complainant to meet the Adi Dravida Welfare Officer, Trichy with regard to joining duty. When the complainant met Tr.Devadoss, Adi Dravidar Welfare Officer, Trichy, he demanded Rs.5,000/- as bribe for join duty without suspension and Tr.Chandrasekaran, Superintendent, Adi Dravidar Welfare Office, Trichy demanded Rs.5,000/- as bribe for processing his file. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Trichy Detachment. In this connection a trap was organized. On 10.08.2009 on the instructions of Tr.Devadoss, Adi Dravidar Welfare officer, Tr.Chandrasekaran, Superintendent, Adi Dravidar Welfare Office, received the bribe amount of Rs.10,000/- from the complainant and both were arrested. On completion of investigation, the case was charge sheeted against the accused. The case was tried before the Hon'ble Special Judge, Trichy. Today 28.08.2028 the Special Court, Trichy pronounced the judgment against of Tr.Devadoss, Adi Dravidar Welfare officer, and Tr.Chandrasekaran, Superintendent, and sentenced both to undergo Rigorous Imprisonment for 3 years and to pay a fine of Rs. 10,000/- u/s.7 of PC Act, 1988 and 3 years and Rs.10,000 u/s.13(2) r/w 13(1) (d) of the PC Act,1988, and ordered to run the sentence concurrently.